**செ. கு. எண்**: 26

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

---

<u>அறிக்கை – 22.1.2013</u>

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டம், சுந்தரபாண்டியபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு. உத்தண்டத் தேவர் என்பவரின் மகன் சுந்தரராஜ் 19.10.2012 அன்று சுந்தரபாண்டியபுரம் பேருந்து நிறுத்தம் அருகே, பேருந்தை விட்டு இறங்கும் போது அரசுப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், மோசட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. தங்கராஜ் என்பவரின் மகன் சந்திரசேகர் 7.1.2013 அன்று மோசட்டை கிராமத்தில் விவசாய நிலத்திற்கு செல்லும் போது அறுந்து கிடந்த மின்சார வயரை மிதித்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் வட்டம், ராவத்தநல்லூர் மதுரா வயலூர் கூட்ரோடு அருகில் 9.1.2013 அன்று சென்னையிலிருந்து வந்தவாசிக்கு சென்று கொண்டிருந்த அரசு பேருந்தும், திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மன்சூராபாத் கிராமத்திலிருந்து செங்கல்பட்டுக்கு சென்று கொண்டிருந்த வேனும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், வேன் ஓட்டுநர் பாஸ்கர் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், முத்தால்நாயக்கன்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள தனியார் பட்டாசு தொழிற்சாலையில் 11.1.2013 அன்று ஏற்பட்ட வெடி விபத்தில், சாத்தூர் வட்டம், மேட்டமலை கிராமத்தைச் சேர்ந்த திரு. சோலையா தேவர் என்பவரின் மகன் பொன்னுசாமி, சிவகாசி வட்டம்,

கீழதாயில்பட்டி கிராமத்தைச் சேர்ந்த காளியப்பன் என்பவரின் மகன் அறிவழகன் மற்றும் திரு. கருப்பையா என்பவரின் மகன் சுந்தரம் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த விபத்துகளில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த துயர சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**